1982 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் நகர் பகுதிக்கு புழல் ஏரியில் இருந்து தண்ணீர் கொடுக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே, தற்சமயம் அங்கே உள்ளவர்கள் அதற்கு ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும், அடுத்து மழைக்காலங்களில் மழைநீர் தேங்காமல் தடுப்பதற்கு சென்னை மாநகராட்சி பெரவள்ளூர் அரசு ஊழியர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பெரியார் நகரில் மழைநீர் வடிகால்வாய்கள் கட்ட ரூ. 45,81,800-க்கு ஒரு சிறப்புத் திட்டம் தீட்டி அதன்படி அந்த சிறப்புத் திட்டத்தை நிர்வாக வசதிக்காகவும், துரித வேலைகளை முடிப்பதற்காகவும் ஏழு சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ. 20.34 லட்சத்திற்கான வேலையை மூன்று பிரிவுகளாகப் பிரித்து முதல் பிரிவினுடைய வேலைகள் முடிந்துவிட்டன. மற்றும் இரண்டாவது, மூன்றாவது பிரிவுக்கான வேலைகள் நடந்து கொண்டுள்ளன. மீதமுள்ள ரூ. 25.47 லட்சத்திற்கான வேலையை நான்கு, ஐந்து, ஆறு மற்றும் ஏழு பிரிவுகளாகப் பிரித்து, அதற்குண்டான வேலைகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் வைப்புத்தொகை கட்டியவுடன் அந்த வேலைகளையும் எடுத்து முடிக்கப்படும். இந்தச் சிறப்புத் திட்டத்தால், பெரியார் நகரில் 30 அடி, 40 அடி மற்றும் 50 அடி அகலமுள்ள தெருக்களில் மொத்தம் 7400 மீட்டர் நீளத்திற்கு வலுவேற்றப்பட்ட கற்பலகையினாலான மூடிய மழைநீர் கால்வாய்கள் கட்டி அதை தற்போது கட்டிமுடிக்கப்பட்ட ஜவஹர் நகர் மழைநீர் வடிகால் வாயுடன் இணைக்கப்படும்.

சென்னை பனைமரத்தொட்டிப் பகுதியில் பொருத்தப்பட்டுள்ள நிலத்தடி குழாய்க்கிணறுகள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*வினா எண். 788—திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை இராயபுரம் பகுதியில் உள்ள பனைமரத் தொட்டியில் (வட்டம் 12) அமைந்துள்ள கார்ப்பரேஷன் லைனில் சென்னை மாநகராட்சியால் பொருத்தப்பட்டிருக்கும் போரிங் பம்புகளில் வரும் தண்ணீரில் மண்ணெண்ணெய் கலந்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) தெரியும்.

(ஆ) இப்பகுதி மக்களுக்குப் போதிய அளவு சுத்தமான குடிநீர், வட சென்னை நகருக்கு வழங்கப்படும் குடிநீர் திட்டத்திலிருந்து குழாய்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் அப்பகுதியில் பிற உபயோகங்களுக்காக அமைக்கப்பட்ட நிலத்தடி குழாய்க் கிணறுகளிலிருந்து எடுக்கப்படும் தண்ணீரில் மண்ணெண்ணெய் வாடை உள்ளது. இதற்கு காரணம் துறைமுகத்திலிருந்து இப்பகுதி வழியே மணலி வரை செல்லும் கச்சா எண்ணெய்க் குழாய்களில் கசிவு ஏற்படுவதன் விளைவாகும்.

(முற்பகல் 9-50)

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, அங்கே பொருத்தப்பட்டிருக்கிற போரிங் பம்புகளில் மண்ணெண்ணெய் கலந்து வருகிறது என்று அரசுக்குத் தெரிந்திருந்தும், அங்கே பூமிக்கு அடியில் செல்லுகின்ற எண்ணெய்க் குழாயில் கசிவு இருக்கிறது என்று தெரிந்திருந்தும் அதை பழுதுபார்த்து மக்களுக்கு வேண்டிய நல்ல தண்ணீரைக் கொடுக்க அரசு இனிமேலாவது யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன். சென்னை பெருநகர் குடிநீர் வாரியத்தின் மூலம் பொருத்துவதற்கு போதுமான குழாய்கள் இல்லை என்று சொல்கிறார்கள். எல்லாப் பகுதிகளுக்கும் குடிநீர் தருகிற குழாய்களை உடனடியாக அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, குடிப்பதற்குக் கொடுக்கப்படும் தண்ணீர் என்பது ஒரு வகை. ஆழ்துளை கிணறுகள் மூலம் மற்ற காரியங்களுக்கு கொடுக்கப்படும் தண்ணீர் என்பது மற்றொரு வகை. இந்த பனைமரத் தொட்டியில் உள்ள மக்களுக்கு நல்ல தண்ணீர் வழங்க 4 பொதுக் குழாய்களும் அதற்கு அருகில் உள்ள கிழக்கு மாதாகோவில் தெருவில் 2 பொதுக் குழாய்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் மூலமாக சென்னை மாநகருக்கு வழங்கப்படுகின்ற நல்ல தண்ணீர் குடிப்பதற்காக வழங்கப்பட்டு வருகிறது. ஆக அந்த மக்களுக்கு 6 குழாய்கள் மூலம் சுத்தமான நல்ல தண்ணீர் வழங்கப்படுகிறது. இது தவிர பனைமரத்தொட்டியிலும், கிழக்கு மாதாகோவில் தெருவிலும் 5 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, அவைகளிலிருந்து மற்ற காரியங்களுக்காக தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது அதைக் குடிக்கக்கூடாது. இந்தக் குழாய்களை அறவே அகற்றிவிட்டு சென்னை பெருநகருக்கு அளிக்கப்படுவது போன்று தண்ணீர் வழங்க முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அந்த பம்புகளை எடுக்கக் கூடாது என்று சண்டை போட்டு, தடுக்கிறார்கள் அந்தப் பகுதி பொதுமக்கள். சீமை எண்ணெய் வருகிறது, அதைப் பயன் படுத்தக் கூடாது, என்று சொன்னாலும் அந்த பம்புகளை எடுக்கக்கூடாது என்று சொல்லி தடுத்து நிறுத்தி வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.